(5). அறிக்கை அளித்தல்

பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் சார்பாக கீழ்க்கண்ட அறிக்கைகளை அவைக்கு அளிக்கிறேன்:

(1) 1973-74 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் தமிழ்நாடு அரசின் வணிகத் துறைகள் பற்றிய அறிக்கையின் மீதான ஏழாவது அறிக்கை.

(2) 1973-74 ஆம் ஆண்டிற்கான வணிகத்துறை அல்லாத துறைகள் பற்றிய இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையின்மீதான எட்டாவது அறிக்கை.

[முற்பகல் 10-10]

(6) குறுகிய காலவிவாதம்

மண்ணெண்ணெய் பற்றாக்குறை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து குறுகிய கால விவாதம். இதிலே எல்லா கட்சித் தலைவர்களையும் நான் கேட்டுக் கொள்வது கட்சிக்கு ஒருவராகப் பேசி ஒரு மணி நேரத்திற்குள் அமைச்சரின் பதிலோடு முடிவடையவேண்டும். ஆகவே ஒவ்வொரு கட்சியிலே இருந்து தாங்களாகவே ஒருவரைச் சொன்னால் நல்லது. அதை வைத்துத்தான் நான் முடிவெடுக்க முடியும்.

பேரவையின் 57-வது விதியின் கீழ் அறிவிப்பு கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்களைத் தவிர, இப்பிரச்சனை குறித்து பேரவையின் 41 மற்றும் 42-வது விதிகளின் கீழ் பல்வேறு உறுப்பினர்களிடமிருந்து அறிவிப்புக்கள் வந்துள்ளன. பேரவையின் 57—வது விதியின் கீழ் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள இருப்பதால் 41 மற்றும் 42-வது விதிகளின் கீழ் கொடுக்கப்பட்ட அறிவிப்புக்கள் எடுத்துக்கொள்ளப் படவில்லை. ஆயினும் இப்பிரச்சனையில் அந்த உறுப்பினர்களும் அக்கறை எடுத்துக் கொண்டுள்ளார்கள் என்பதைத் தெரிவிக்கும் வகையில் அவர்களது பெயரைப் படித்துவிட விரும்புகிறேன். திரு. மு. அம்பிகாபதி, திரு. சி. ஆறுமுகம், திரு. வி. கே. ராஜு, திரு. மா. மணிமாறன், திரு. கே. பண்ணை சேதுராம், திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா, திரு. ப. பொன்னுரங்கம், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம், திரு. செ. இராமலிங்கம், திரு. கூ. ச. முருகேசன், திரு. அ. செல்லப்பா, திரு. க. மருதாசலம்,